RESEARCH ARTICLE

INTERNATIONAL RESEARCH JOURNAL OF TAMIL
சர்வதேசத் தமிழ் ஆய்விதழ்

DOI: 10.34256/irjt224s1611

OPEN ACCESS

# வலய நாடு, சாமுண்டி தெய்வங்களுக்கு இடையேயான ஒப்பீயல் பார்வை

ர. ரெஜிதா [அ, *]

[அ] தமிழ்த்துறை, பூசாகோ கலை அறிவியல் கல்லூரி, கோயம்புத்தூர்-641014, தமிழ்நாடு, இந்தியா

# A Comparative View between Valayanad Devi and Chamundi Deities

R. Rejitha [a, *]

[a] Department of Tamil, PSG College of Arts & Science, Coimbatore-641014, Tamil Nadu, India

* Corresponding Author: rejitha2823@gmail.com

Received: 01-07-2022
Revised: 22-09-2022
Accepted: 09-10-2022
Published: 12-12-2022

Check for updates

**ABSTRACT**

Literature helps us to know about a country, people, beliefs, professions and races but it doesn't give a clear idea about folklore. Folklore literature is a storehouse of what human society has experienced and learned. At beginning man lived his life according to his wish. The only source for him is nature and they worshipped nature. From that many festivals, beliefs and sacrifices are formed. They separated worshipping as minor deity worship and major deity worship. Folk literature is created and preserved by the lay people. The history of the deities is told in mythological stories and epics. Each deity has its own myths. The aim of this article is to compare the beliefs, rituals and ceremonies between the Valayanad Devi and Samundi Deities.

**Keywords:** Valayanad Devi, Chamundi Devi, Folk literature, Worship.

## முன்னுரை

இலக்கியம் என்பது மக்களின் வாழ்வில் முக்கியமான இடத்தைப் பெற்றுள்ளது.அனைத்திற்கும் ஆதாரமாக விளங்குவது இலக்கியம். நாட்டுப்புற இலக்கியம் என்பது இனத்துக்கு இனம் மனிதனுக்கு மனிதனால் மாறுபடக்கூடியது. நாட்டுப்புற இலக்கியங்களில் முக்கியமானது தெய்வ வழிபாடு.நாட்டுப்புற மக்கள் வாழ்க்கையில் எந்தவிதமான நிகழ்ச்சிகள் நடந்தாலும் முதலில் தெய்வ வழிபாட்டையே நாடுவார்கள். அதிகமான கிராம மக்கள் பெண் தெய்வங்களை வணங்குகின்றனர் (Sakthivel, 2003). பெண் தெய்வங்களை செழுமையின் அடையாளமாக கருதுகின்றனர். நாட்டுப்புறங்களில் கடைபிடிக்கப்படும் தெய்வ வழிபாடு ஒவ்வொரு இன மக்களும் மரபுவழியாக கடைபிடிக்கும் ஒரு செயற்பாடாகும். பெண் தெய்வங்களை அம்மன்,காளி, கன்னி என தமிழில் குறிப்பிடுவது போல கேரளத்தில் தேவி, பகவதி என்று குறிப்பிடுவார்கள். ஒரு தெய்வத்திற்கு பல புனை பெயர்கள் இட்டு வெவ்வேறு நாடுகளில் வணங்கி வருகின்றனர்.இவ்வாறு தமிழில் காளி என்று அழைக்கப்படும் தெய்வத்தை கேரளாவில் வலயநாடு தேவி என்று அழைக்கின்றனர் (Arivuduai Nambi, 2010). வலய நாடு தேவிக்கும், சாமுண்டிக்கும் இடையே உள்ள ஒற்றுமைகளை கள ஆய்வு வழியே ஆராயப்படுகிறது.

## வலய நாடு தேவி வரலாறு

கோழிக்கோட்டை ஆட்சி செய்த மன்னர்களில் ஒருவரான சமூத்திரி மன்னரின் குலதெய்வமாக வலயநாடு தேவி திகழ்கிறாள். "சாமூத்திரி மன்னனுக்கும் வள்ளுவ நாட்டின் மன்னரான வள்ளுவ கோனாதிரி மன்னனுக்கும் இடையே மாபெரும் போர் நடைபெற்றது. இருவருக்கும் சிறந்த படை

வலிமையும் நீதி வலிமையும் இருந்தது. எனினும் இந்தப் போரில் சாமூத்ரி மன்னன் தோற்கடிக்கப்பட்டார் (Narayanan, 2015)".

போரில் தோற்கடிக்கப்பட்டதை நினைத்து மனம் வருந்திய மன்னன் புலவர்களின் அறிவுறுத்தலின் பேரில் திருமந்தம் குன்னு என்ற கோயிலுக்குச் சென்றார்.அங்குள்ள திருமந்தம் குன்னு அம்மா என்னும் தெய்வம் அமர்ந்து தவம் மேற்கொண்டார்.

சாமூத்ரியின் தவத்தைக் கண்டு மன மகிழ்ச்சியடைந்த தேவி மன்னரிடம் என்ன வரம் வேண்டும் என கேட்க, மன்னர் தனது இராஜ்ஜியத்திற்கு தேவியை அழைத்தார். தேவி மன்னருடன் வர சம்மதித்தாள்.இருவரும் சென்று கொண்டிருந்தனர். உடனே தேவி உடன் வருவதை பார்க்க என்னி திரும்பி பார்த்தார். மீண்டும் திரும்பி பார்த்தால் தான் உடன் வருவதை நிறுத்தி விடுவேன் என தேவி கூறினாள். அதை ஒப்புக்கொண்டு இருவரும் நடக்க தொடங்கினார்கள். கொலுசு சப்தம் கேட்காமல் போக மன்னர் உடனே தேவி கூறியதை மறந்து திரும்பி பார்த்தார். கோபமுற்ற தேவி இனி மன்னருடன் செல்வதை நிறுத்தினாள். மன்னர் மன்னிப்பு கேட்க சாந்தி அடைந்த தேவி ஒரு வளையலை கழட்டி வடக்கு நோக்கி வீசகீழே விழும் இடத்தில் தான் தங்கி இருப்பதாக கூறி சென்றாள். ஒரு வாரம்வலையல் சுழன்று மாங்கோடு அருகில் திரு வலய நாட்டில் விழுந்தது. உடனே சாமூத்ரி மன்னர் தேவிக்கு கோயில் எழுப்பினார். இந்த கோயில் வடக்கு நோக்கி காணப்படும். ஒவ்வொரு முறை போருக்கோ மற்ற சுப காரியங்கள் செல்லும் பொழுதும் தேவியை தரிசித்து விட்டு செல்வார். அது முதல் அவருக்கு வெற்றி கிடைக்க அதற்கு தேவியே காரணம் என நம்பி வழிபட்டு வந்தார். தேவையான வழிபாடு செய்தார். இவ்வாறு வலயநாடு தேவி கோயில் பிரசித்தி பெற்றது.

## சாமுண்டி தேவி வரலாறு

முஷத்தன்மார்களின் குலதெய்வமாக சாமுண்டி தேவி திகழ்கிறாள். அசுரர்களான சும்பன் நிசும்பன் ஆகியோர் இந்திரனின் ராஜ்யத்தை போர் செய்து கைப்பற்றினார்கள். சொர்க்கத்திலிருந்து தேவர்களை துரத்தினார்கள். உடனே மனவருத்தம் அடைந்த தேவர்கள் சிவனிடம் பிரார்த்தனை செய்தனர். இவர்கள் மனமுருக பிரார்த்தனை செய்ததை ஏற்ற சிவபெருமான் பார்வதி தேவியை படைத்தார். பார்வதி தேவியின் அழகைக் கண்டு வியந்து சும்பன் பார்வதி தேவியைத் திருமணம் செய்து கொள்ளுமாறு கேட்டார். அதனை பார்வதி தேவி மறுத்தார் உடனே கோபமடைந்த அரக்கன் தேவியை அழிக்க அரக்கர்களை அனுப்பினார். அதனால் கோபமுற்ற பார்வதிதேவி சாமுண்டியாக(காளி) அவதாரம் எடுத்து அந்த அரக்கர்களையும் அங்குள்ள அனைவரையும் அழித்தாள் என்று புராணக் கதைகள் கூறுகின்றன. இன்றளவும் சாமுண்டி தேவியிடம் கெட்ட எண்ணங்களோடு செல்லுவது ஆபத்து என்று கூறுவார்கள்.இதன் நினைவாக சாமுண்டி தேவி ஆலயம் காஷ்மீரில் ஹரித்துவார் எனும் இடத்தில் கட்டப்பட்டு உள்ளது.

## வலய நாடு கோயிலின் சிறப்புகள்

வலயநாடு தேவி கோயிலில் நான்கு புறமும் பெரும் பழமையான கோபுரங்கள் உள்ளன. வலய நாடு தேவி கோயிலானது இந்தியாவில் பிற தேவி கோயிலிலிருந்து தனித்துவமான அடையாளத்தை கொண்டுள்ளது. இந்த கோயில் வடக்கு நோக்கி அமைந்து காணப்படும். ருருஜித் வழிபாட்டு முறைப்படியே பூஜைகள் செய்யப்படும். "வலயநாடு தேவி கோயிலின் முதன்மை தெய்வம் காஷ்மீரைச் சேர்ந்த தெய்வம் சண்டிகா (காளி) என்று அழைக்கப்படுகிறது".

இந்த கோவிலில் சிவன், தேவாரா பகவதி, ஐயப்பன், விக்னேஸ்வரன், சோத்ர பாலன், சாஸ்தா, கணபதி, என சப்த சிலைகள் காணப்படும். இந்த சப்தமாதர் சிலைகள் தெற்கு சுவர் பகுதியில் அமைக்கப்பட்டுள்ளன. வலைய நாடு தேவி கோவிலில் காஷ்மீரைச் சேர்ந்த முஷத்தன்மார்களே பூஜை செய்வர்.விழாக்களின்போது சக்தேய முறைப்படி பிராமணர்கள் பூஜை செய்வார்கள். தஞ்சாவூரை சேர்ந்த சிவாங்கர் எனும் சைவயோகி தங்க தகட்டினால் வரைந்தவரைந்த ஸ்ரீ சக்கரத்தை இன்றளவும் தேவி சன்னதியில் வைத்து பிரதிஷ்டை செய்கின்றனர்.இதன் மூலம் நல்லது மட்டுமே நடக்கும் என்ற

எண்ணம் அந்த மக்களிடம் உள்ளது. வலய நாடு தேவியின் உருவச் சிலையில் சண்டிஹா பாவம் உள்ளது.புலர்வ தந்திரங்களை அடிப்படையாகக் கொண்டு வலயநாடு தேவி கோயிலில் ருருஜித் வழிபாடுகள் நடைபெறுகிறது. இந்த வழிபாடானது சாமூத்ரி மன்னர் காலம் முதல் இன்றளவும் தலைமுறை தலைமுறையாக வழிபட்டு வருகின்றனர்.

## சாமுண்டி கோயில் சிறப்புகள்

"சாமுண்டி தேவி கோயில் 1929 ஆம் ஆண்டு காஷ்மீர் மன்னராக இருந்த சுகத் சிங் என்பவரால் கட்டப்பட்டது" இந்தக் கோவில் மிகவும் பழமை வாய்ந்த கோயிலாகும். இந்த கோவிலில் கணபதி, யக்ஷயம்பற, புவனேஸ்வரி, ஆயிரவல்லி, குரு மந்திரம், அன்னபூர்ணேஸ்வரி, நாகர்காவு ஆகிய தெய்வங்களின் சிலைகள் சாமுண்டி தேவியை சுற்றிலும் காணப்படுகிறது. தேவி மிகவும் பெரியதாகவும், சிவந்த கண்களும், பெரிய பற்களும் கோபமுற்ற முக பாவனைகளுடனும் காணப்படுகின்றாள்.

## வலய நாடு கோயில் விழாக்கள்

வலயநாடு தேவி கோயிலின் திருவிழா ஒவ்வொரு ஆண்டும் மகரத்தில் வரக்கூடிய கார்த்திகை மாதத்தில் தொடங்கி ஏழு நாட்கள் கோலாகலமாக நடைபெறுகிறது. இதனை ஆராட்டு கடவு என்று கூறுவார்கள். இந்த ஏழு நாள் நடைபெறும் ஆராட்டு கடவு இறுதியில் திரிச்சால என்னும் குளத்தில் சமர்ப்பிக்கப்படுகிறது. திருவிழா நடைபெறும் 7 நாட்களும் ஊரில் இருந்து வெளியே சென்று மக்கள் தங்குவதற்கு அனுமதி இல்லை. வீட்டிற்கு ஒருவர் கட்டாயமாக திருவிழாவில் கலந்துகொண்டுவேலை செய்தல் வேண்டும். இந்த திருவிழா நாட்களில் வலயநாடு தேவியை முஷத்தன்மார்களே ஒன்று சேர்ந்து வட்டொளி என்னும் கோயிலில் வைப்பார்கள். தொடர்ந்து 7 நாட்கள் மகாதேவி கோயிலிலிருந்து தேவியின் உடைவாளை எடுத்து வந்த மக்கள் முன்னிலையில் பூஜை செய்வார்கள்.இந்த பூஜையை நம்பூதிரிகள் செய்வார்கள். "கேரளத்தின் முக்கியமான ஆராட்டுகளில் ஒன்றாக வலயநாடு தேவி கோயிலில் சாமூத்ரி அரச குடும்பத்தினர் நடத்தப்படுகிறது".

பூஜை நடைபெறும் பொழுது மக்களை மகிழ்விக்க கும்பக்களி,ஆடல்கள், பாடல்கள் முதலிய கலைகளும் நடைபெறும். குருதிகளம் கோவில் முற்றத்தில் காணப்படும். இதன்முன் வாழைப்பூக்களும், வாழை குழைகளும் சுற்றி வைத்து அலங்கரிப்பார்கள். அதனை சுற்றி விளக்குகளும் வைத்திருப்பார்கள். இதனை அடுத்து 7,14 என்ற எண்ணிக்கையில் தீப்பந்தம் வைத்திருப்பார்கள்.இந்த தீப்பந்தத்தின் நடுவில் ஒரு பெரிய பந்தம் வைத்திருப்பவர்கள். அதனை குருதி பந்தம் என்று அழைப்பார்கள். இந்தப் பந்தத்தினை தென்னின் பூக்கள் மற்றும் மாலைகளை போட்டு அலங்கரிப்பார்கள். பிறகு அதற்கு முன் பெரிய வெள்ளை பூசணியை வைத்திருப்பார்கள்.பிறகுஅதற்கு பூஜைகள் செய்வர்.பூஜை முடிந்தவுடன் பூசனையை வெட்டி கோவிலின் நான்கு புரங்களிலும் வீசுவார்கள். பிறகு மஞ்சள், சுண்ணாம்பு கலந்து குருதி களத்தை ஆரத்தி எடுத்து கீழே ஊற்றுவார்கள். இவ்வாறாக ஏழு நாட்கள் சிறப்பு பூஜைகள் நடைபெறும். 7 வது நாள் உற்சவ பூஜையை பிராமணர்கள் செய்வார்கள். இந்த திருவிழாவை "சிவன் தேவியை மணமுடிக்க வருவதாகவும் தேவி விருப்பமில்லாமல் வட்டொளி எனும் இடத்தில் இருக்க சிவன் அங்கேயே குடியமர்ந்ததாகவும் கூறப்படுகிறது".

## இந்த திருவிழாவை அடுத்து மற்றொரு விழாவும் நடைபெறும் அவை

விருச்சகம் முதல் நாளிலிருந்து 41 நாட்கள் ஒரு மண்டலம் நடைபெறும். இந்த 41 நாட்களும் களம் எழுத்து பாட்டு நடைபெறும். அதாவது சாமி உருவத்தில் கலர் அரசியை வரைவர். பிறகு அதன் முன்பு ஒரு பெரிய ஹொம குண்டம் வைப்பர்.இந்த41 நாட்கள் தொடர்ந்து பூஜை செய்வார்கள். இந்த பூஜையில் பெண்கள் கட்டாயம் கலந்து கொண்டு சிறப்பிப்பார்கள்.இவை வலயநாடு மக்களுக்காக முஷத்தன்மார்கள் செய்யும் சிறப்பு பூஜை ஆகும்.இந்த பூஜை செய்து முடிக்கும் வேலையில் சன்னி தானத்தில் வைத்திருக்கும் ஸ்ரீ சக்கரத்தில் சிறப்பு பூஜை செய்வார்கள்.இவ்வாறு ஆண்டுதோறும்

திருவிழா, சிறப்பு பூஜைகள் நடைபெறும். இந்த விழாக்களின் போது மற்ற ஊரினரும் கலந்து கொள்வது வழக்கம்.

## சாமுண்டி கோயில் விழாக்கள்

சாமுண்டி தேவிக்கு நவராத்திரி விழா ,பால்குடம் எடுத்தல் நாடகம் போன்றவை வெகு சிறப்பாக நடைபெறும். பங்குனி மாதம் மகர நட்சத்திரத்தில் 7ஆம் நாள் பொங்கல் விழா நடைபெறும். பெண்கள் அனைவரும் கட்டாயம் கலந்து கொள்வது வழக்கம். ஏழு நாட்கள் தொடர்ந்து நடைபெறும் ஒவ்வொரு நாளும் நவராத்திரி, திருநடனம், பாடல்கள் போன்றவை சிறப்பாக நடைபெற்று ஏழாம் நாள் இறுதியில் பெண்கள் அனைவரும் கூடி பொங்கல் வைத்து சாமுண்டி தேவியை வணங்குவதை வழக்கமாக கொண்டுள்ளனர். இவர்கள் பொங்கல் வடக்கு நோக்கி பொங்குவதே நல்ல சகுனமாக நம்புகின்றனர். பொங்கல் பொங்குவது வைத்து அந்த வருடம் முழுவதும் நல்லதே நடக்கும், தீயவை நடக்கும் என்று இவர்கள் தங்களுக்குள் ஒரு கருத்தையும் எடுத்துக் கொள்கிறார்கள்.

## வலய நாடு தேவி சடங்குகள்

"சடங்கு என்பது சமயம் அல்லது மரபு வழியாக ஏற்றுக்கொள்ளப்பட்ட குறிப்பிட்ட சில செயல்முறைகளை தொகுப்பு, சடங்குகள் ஒழுங்கான கால இடைவெளிகளிலோ, அவரவர் விருப்பப்படியோ நடைபெறலாம். அல்லது ஒரு முழுச் சமுதாயத்தாலுமே நடைபெறலாம்". திரு வலய நாடு தேவி கோயிலில் அவ்வூர் மக்கள் சில சடங்கு முறைகளைப் பின்பற்றுகின்றனர். அதில் மிகவும் முக்கியமான ஒன்று திரிக்கால பூஜை. திரிக்கால பூஜை என்பது காலை பூஜை, உச்ச பூஜை, இரவு பூஜை என்பதை குறிக்கும்.ஒவ்வொரு பூஜையிலும் வலயநாடு தேவியை ஒவ்வொரு விதமாக அலங்கரித்து வைத்திருப்பார்கள்.தேவியின் ஒவ்வொரு பூஜைக்கும் உடை, ஆபரணங்கள் போன்றவற்றை மாற்றுவார்கள்.காலை பூஜையின் போது கடவுளுக்கு பிரசாதம் படைப்பர்.விழாக்களின் போது இறைச்சியும் மற்ற நாட்களில் பழங்கள்,காய்கறிகள் வைத்து படைப்பர். மதிய பூஜையின்போது அன்னதானமும் வழங்கப்படும்.

## சுத்து விளக்கு விவிதப் புஷ்பாஞ்சலி

கோவிலைச் சுற்றிலும் சுவரிலேயே விளக்குப் பொருத்தப்பட்டிருக்கும்இவை சுத்து விளக்கு என்று அழைக்கப்படும். "சரவிளக்கு, நிலை விளக்கு, கிளித்தட்டு விளக்கு, கைவிளக்கு, சுத்து விளக்கு என கோயிலில் பல விளக்கங்கள் உள்ளன (Dinamalar, 2018).

தேவி கோவிலை சுற்றியுள்ள இந்த விளக்குகள் இரவு நேரங்களிலேயே பற்ற வைப்பார்கள் விவித புஷ்பாஞ்சலி எனும் சடங்கு அனைவராலும் விரும்பப்படுவது. வலய நாடு தேவிக்கு விதவிதமான பல வண்ண பூக்களால் அலங்கரித்து பூஜை செய்வது வழக்கம். அதைக் காண பல மக்கள் வருவார்கள்.விவித புஷ்பாஞ்சலி செவ்வாய் மற்றும் வெள்ளிக் கிழமையில் பிரம்மாண்டமான அலங்காரத்துடன் காணப்படும்.

## சாமுண்டி தேவி சடங்குகள்

சடங்குகள் என்பது ஒவ்வொரு கோயிலிலும் அவர் அவர் நம்பிக்கைக்கு ஏற்றவாறு நடைபெறுகின்றன. சடங்கு என்பது இன்றளவும் கடைபிடிக்கப்பட்டு வரும் ஒரு முக்கியமான முறையாகும்.

“புஷ்பாபிஷேகம்

புடவை சாத்துதல் போன்ற சடங்குகள் மிகவும் பிரசித்தம் பெற்றவை.

புஷ்பாபிஷேகம் புடவை சாத்துதல்”

குழந்தை வரம் வேண்டி செய்யப்படும் சடங்கு முறைகளில் இவையும் ஒன்று. சாமுண்டி தேவிக்கு புஷ்பங்கள் நிறைய தேவியை அலங்கரித்து அபிஷேகம் செய்வது புஷ்பாபிஷேகம். இவை மட்டுமல்லாது பெண்கள் சாமுண்டி தேவியை சுற்றி வருவதும்,நெருப்புக் குழியில் இறங்குவதும், தீச்சட்டி எடுப்பதும் இந்த புஷ்பாபிஷேகத்தில் நடைபெறும் பூஜை ஆகும். தாங்கள் நினைத்தது நடக்க வேண்டும் என்ற எண்ணத்துடன் புஷ்பாபிஷேகம் எனும் சடங்கு முறை இவர்கள் செய்கின்றனர். இவர்கள் பட்டு புடவை வாங்கி புடவையும் சாத்துகின்றனர்.

## வலய நாடு கோயில் நம்பிக்கைகள்

"நம்பிக்கையானது மனிதனோடு பிறந்து மனிதனோடு அழிவதாகும். இயற்கையில் புதிரான செய்திகளை உணர இயலாத நிலையிலும் வெளியே வருவதற்கும் காரணம் அறியாத நிலையில் மனித மனம் தன் போக்கை பதிவு செய்துகொண்ட காரண காரியங்களை நம்பிக்கைகளாகும்" (Muthaiya, 2016). நம்பிக்கைகள் என்பது ஒரு மனிதனின் ஆழ்மனதில் இருந்து தோன்றுவது.

## சாக்தேய பூஜை

சாக்தேய பூஜை என்பது கோயில் நடைபெறாமல் முஷத்தன்மார்கள் வீடுகளில் நடைபெறும் பூஜையாகும். மத்தியமத்தில் (உச்சிவேளையில்) நடைபெறக் கூடியது. இவை பிருதுதோஷம் (முன்னோர்களின் சாபம்) நீங்கவும் கர்ம வினைப்பயன்கள் நீங்கவும், சார்வ ஐஸ்வர்யம் பெறவும் இந்த பூஜை செய்கின்றனர். இதன் மூலம் கெட்டது நீங்கி நல்லது நடக்கும் எனவும் நம்புகின்றனர். வலயநாட்டில் உள்ள மக்கள் அனைவரும் குழந்தை பிறந்தவுடன் தேவியின் காலடியில் வைத்து இது இனி தேவியின் குழந்தை என கூறிய பின்னர் குழந்தை எடுத்துச் செல்வர்.இதன் மூலம் குழந்தைக்கு தீங்கு நேராமல் தேவி குழந்தையை காப்பாள் என நம்புகின்றனர்.

## குருதி தர்ப்பணம்

இவை சிறுகுருதி, பெருங்குறுதி என வகைப்படும் .இவை மக்களின் வேண்டுதல் பொருத்து பலி கொடுப்பர், கோழி சிறுகுருதியாகவும், ஆடு பெருங்குறுதியாகவும் உள்ளன. அவர்கள் வேண்டுதலை நிறைவேற்ற கொடுப்பது வழக்கம்.

## சாமுண்டி தேவியின் கோயில் நம்பிக்கைகள்

சாமுண்டி தேவியின் கோயிலில் ரத்த புஷ்ப்பார்ச்சனை

## சுயம்வரார்ச்சனை

அத்தாழ பூஜை முதலிய நம்பிக்கைகள் காணப்படுகின்றன.

## ரத்த புஷ்ப்பார்ச்சனை

நினைத்தது நடக்க வேண்டி 13 வெள்ளிக் கிழமைகளில் காலை தெய்வத்தை புஷ்ப அர்ச்சனை செய்வதை கோழி ஆடு மாடு போன்றவற்றை செய்வது வழக்கம் 13 வெள்ளிக் கிழமைகளில் இவ்வாறு செய்வதன் மூலம் அவர்கள் வேண்டியதும் நடக்கும் என்று நம்புகின்றனர்.

## சுயம்வரார்ச்சனை

திருமணமாகாத பெண்களும், ஆண்களும், திருமணம் ஆக வேண்டுமென நினைப்பவர்களும், காளிதேவி முன் வந்து வேண்டுவது இவர்கள் ஏதேனும் நேர்த்தி கடன் செய்வதாக வேண்டி திருமணம் ஆனதும் அதனை செய்வது சுயவரார்ச்சனை ஆகும்.

### அத்தாழ பூஜை

பூஜை என்பது இரவு நேரங்களில் நடத்தப்படும் சிறப்பு பூஜை ஆகும். இவை பகல் பொழுது நடத்தப்படாது. மாறாக இரவில் நடத்தப்படும் பூஜை. இந்தப் பூஜை மூலம் அவர்களுக்கு நல்லது நடக்கும் என்று மக்கள் நம்புகின்றனர்.

### வலய நாடு தேவி, சாமுண்டி ஒற்றுமைகள்

வலய நாடு, தேவி காளி தேவி இரு தெய்வங்களும் வேறு இடங்களில் உள்ளன. அவை புராணங்களில் வேறு கருத்தைப் பெற்றுள்ளன. இலக்கியங்களில் கூறப்பட்டுள்ள தலபுராணங்கள் வேறுபட்ட கதைத் தளங்களைக் கொண்டுள்ளன. அதுபோல கோயிலின் சிறப்புகளும் மாறுபடும். கோயில் அமைந்துள்ள இடம், அங்கு வாழும் மக்களின் வாழ்க்கை முறை, பழக்க வழக்கங்களை கொண்டு வலயநாடு தேவி கோயிலிலும் காளி தேவியின் கோயிலும் இடையே உள்ள சிறப்பம்சங்கள் மாறுபடுகின்றன. மக்கள் தங்களுக்கு ஏற்றது போல நடத்தும் ஒரு பண்டிகை ஆகும்.

வலயநாடு தேவி கோயில் விழாக்களும் காளி தேவி கோயில் விழாக்களும் மாறுபாட்டுடன் காணப்பட்டாலும் இரு கோயில்களிலும் மகரத்தில் தொடங்கி தொடர்ந்து ஏழு நாட்கள் விழாக்கள் சிறப்பிக்கப்படுகிறது. தொடர்ந்து நடைபெறும் விழாவில் ஆடல், பாடல் முதலியன நடைபெறும். நோக்கங்கள் மாறுபட்டாலும் தேவியின் விழா நாட்கள் ஒற்றுமையுடன் காணப்படும்.

சடங்குகள் என்பது இலக்கிய வழி; மரபு வழி கூறப்பட்ட கூற்றாகும். எனினும் இவை மனிதனால் உருவாக்கப்பட்டது. காளி, வலயநாடு தேவி இருவருக்கும் புஷ்பத்தால் செய்யப்படும் பூஜை ஒற்றுமை உடையது. இரு தேவிகளுக்கும் பல வண்ண பூக்களால் அலங்கரிப்பது பிடிக்கும் என இம்மக்கள் நம்புகின்றனர்.

மனிதனால் மனிதனுக்கு உருவாக்கப்பட்டது நம்பிக்கை. மனிதன் இறைவனை முழுவதுமாக நம்பி சில வேண்டுதல்களை செய்வான். பார்வதி காளியாகவும் வலயநாடு தேவியாகவும் வீற்றிருப்பதால் இரு தெய்வங்களுக்கும் இரத்த பலி கொடுப்பது நடைபெறுகிறது. இவையின் நோக்கம் ஒன்றே. காளி கோயிலில் இதனை ரத்த புஷ்ப்பார்ச்சனை எனவும் வலயநாடு தேவி கோயிலில் குருதித் தர்ப்பணம் எனவும் அழைப்பர். இதற்கு பெயர் மட்டுமே மாறுபடும் நோக்கம், வேண்டுதல்கள், நம்பிக்கை இதற்கு ஒன்றே .இதுபோல வலய நாட்டில் சாக்தேய பூஜை என நடைபெறும் காளி தேவி கோயிலில் அத்தாழ பூஜை என நடைபெறும் இதில் இரவு நேரங்களில் நடைபெறும் பூஜையின் நோக்கம் ஒருமித்து காணப்படும்.

## முடிவுரை

இலக்கியங்களில் காணப்படும் தெய்வ நம்பிக்கைகள் மனித வாழ்க்கை முறையை தத்ரூபமாக குறிக்கிறது. இவை ஒரு தெய்வத்தின் பல அவதாரங்களை குறிக்கிறது. இவற்றில் வரலாறுகள் மாறுபடும், வாழ்வியல், நம்பிக்கை முதலியன மாறுபடலாம். இதனை ஒப்பீடு செய்து ஆராயும் பொழுது பல்வேறு வகையான அமைப்பு முறைகள் ஒன்றாக காணப்படும். இவ்வாறு வலய நாடு தேவியும், சாமுண்டி தேவியும் நில அமைப்பில் வெவ்வேறு இடங்களில் காணப்பட்டாலும் வழிபாடுகள், சடங்குகள், நம்பிக்கைகளில் மக்கள் வேறுபட்டு இருந்தாலும் சாமுண்டியின் வழித்தோன்றலாகவே வலய நாடு தேவி இருப்பதாக தலபுராணம் வழியாவும், கள ஆய்வு வழியாகவும் அறியமுடிகிறது. இந்த விழாக்கள், சடங்குகள், பூஜைகள், தர்ப்பணம் முதலியன இரண்டு நிலபரப்பில் வாழும் மக்களின் நம்பிக்கை அடிப்படையிலும், சமயங்கள், எண்ணங்கள், அடிப்படையிலும் மாறுபடுகிறது.எனினும் இரு தெய்வங்களுக்கும் ஒரே மாதிரியான வழிமுறைகள் பின்பற்றி வருகின்றனர். மனிதனின் நோக்கமே மாறுகிறது. தெய்வ வழிபாட்டு முறைகளில் மாற்றங்கள் குறைவாக உள்ளது என கள ஆய்வில் தெரியவந்துள்ளது.

## References

Arivuduai Nambi, M.S. (2010) Tamiliga Naatupuraviyal Aaivukal, New Century Book House, Chennai, India.

Dinamalar, (2018) Daily News Paper, Chennai, India.

Muthaiya. M. (2016) Nattupura Marupukal, Tirunelveli Thennindia Saiva Sithantha Noorpathippu Kazhagam, Tirunelveli, India.

Narayanan, M.S. (2015) Valiya Naadu Devi Varalaru, Kerala Calicut University Press, Calicut, India.

Sakthivel, S. (2003) Naattuppura eyal aaivu, Manivasagar publications, Chennai, India.

**Funding:** No funding was received for conducting this study.

**Conflict of Interest:** The Author has no conflicts of interest to declare that they are relevant to the content of this article.

**About the License:**

Attribution 4.0 International (CC BY 4.0)

© The Author 2022. The text of this article is licensed under a Creative Commons Attribution 4.0 International License